# கறுப்புப்பணத்தின் பொருளாதாரத் தாக்கங்கள்

## இந்தியா பற்றிய சிறப்பு நோக்கு

செ. சந்திரசேகரம்

**ஆய்வுச்சுருக்கம் :** பொருளாதாரம் ஒன்றில் அமைக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு அப்பால் அமைக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்படுகின்ற கறுப்புப் பணமானது எவ்வாறு ஒரு பொருளாதாரத்தை பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது என்பதை எடுத்து விளக்கி இந்தியாவின் கறுப்புப் பண அளவுகளையும் அவற்றின் போக்குகளையும் எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். கோட்பாட்டு ரீதியாக பணத்தின் அளவு அதன் வேண்டப்பட்ட அளவை விட அதிகரிக்கும்போதும் அல்லது குறையும்போதும் பொருளாதாரத்தில் பண நிரம்பலால் கிடைக்கப்பெறும் நன்மைகள் இல்லாது போகின்றன. இந்தக் கோட்பாடு அடிப்படையில் கறுப்பு பணமானது பொருளாதாரத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.பொருளாதார திட்டமிடல் குழப்பப்படுகின்றது. இந்தியாவில் கறுப்பு பணம் பல்வேறு மூலங்களில் இருந்து உருவாக்கப்படுகின்றது. உலகிலே கறுப்புப் பணத்தை கொண்டிருக்கின்ற நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருக்கின்றது. கறுப்புப்பணத்தை ஒழிப்பதற்கு 2016 மோடியின் அரசாங்கத்தாலும் முன்னைய அரசாங்கங்களினாலும் பலநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகள் வெற்றியடைவதற்கு பல சவால்கள் தடையாக உள்ளன. இந்தியாவில் முழுமையான அரசியல் பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்கள் மூலமே கறுப்புப் பணத்தை ஒழித்து அதை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்.

**முதன்மைச் சொற்கள் :** கறுப்பு பணம், இந்தியா, பணச் சலவை, கள்ளப்பணம் மற்றும் பணமோசடிகள்

### 1. அறிமுகம்

சட்டத்துக்கு புறம்பாக முறையற்ற வழிகளில் அரசாங்கப் பதிவுகளில் சேர்க்கப்படாது சம்பாதிக்கப்படும் பணம் கறுப்புப்பணம் என வரையறுத்துக்கொள்ளலாம். இருப்பினும் இவ் வரையறை மிகவும் கடினமானது. இலங்கை, இந்தியா போன்ற குறைவிருத்தி நாடுகளில் அவ்வாறு சட்டத்துக்கு வெளியே உழைக்கப்படும் பணம் மிகப்பெரிய ஒரு பொருளாதாரமாக சட்ட ரீதியான பொருளாதாரத் திற்கு சமாந்தரமாக வளர்ந்து நிற்கின்றது. கறுப்புப்பணம் என்பது உலகத்தில் வளர்ந்த மற்றும் வளர்ந்து வருகின்ற நாடுகளில் காணப்பட்டபோதும் இது வளர்ந்து வரும் நாடுகளில் மிகப்பெரிய அளவில் காணப்படுகிறது. கறுப்பு பணத்தினை கணக்கிடப்படாத வருமானம் (unaccountable income) அழுக்குப் பணம்(dirty money)கறுப்பு வருமானம் (black income) பாதாளஉலக சொத்து(underground wealth) கறுப்புப் பொருளாதாரம் (black economy ) சமாந்தர பொருளாதாரம் (parallel economy) நிழல் பொருளாதாரம் (shadow economy ) பாதாளஉலக பொருளாதாரம்(underground economy) என பல பதங்கள் மூலம் அழைக்கப்படுகின்றது. ஓர் பொருளாதாரம் அமைக்கப்பட்ட பொருளாதாரமாக (Formal Economy)வளரும் போதுதான் அப்பொருளாதாரம் உறுதியானதாகவும் நிலைத்து நிற்கக் கூடியதானதாகவும் வளர்ந்து

செல்கிறது. பொருளாதார திட்டமிடல் மற்றும் கொள்கை வகுத்தல் இலகுவாகவும் செயற்திறனுள்ளதாகவும் அமைகின்றது. எனவே அமைக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகள்(Informal Economic Activities) எவ்வாறு பொருளாதாரத்தை பாதிக்கின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விபரண முறையில் இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு ஆராயப்படும் இக்கட்டுரையானது ஐந்து பிரிவுகளை கொண்டது. முதலாவது பிரிவு கோட்பாட்டு விடயங்களை எடுத்துக்கூறி பணம் பொருளாதாரத்தில் வகித்து வரும் பங்கினை விளக்குகின்றது. கோட்பாட்டு பின்னணியில்லாமல் இந்த கறுப்புப் பணத்தால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் இழப்புக்களை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. இரண்டாவது பகுதி கறுப்புப் பணம் உருவாகின்ற மூலங்கள்,இதில் பங்கு கொள்பவர்கள், உலகளாவிய ரீதியில் கறுப்புப்பண நடவடிக்கைகளின்அளவு ஏனைய புள்ளி விபரங்களை எடுத்துக்கூறுகிறது. மூன்றாவது பகுதி கறுப்புப் பணத்தால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தீமைகளை எடுத்து காட்டுகின்றது. நான்காவது பகுதி கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கு எடுக்கப்படும்நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுகின்றது. ஐந்தாவது பகுதி இந்தியாவில் கறுப்புப்பணத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை எடுத்து விளக்குகிறது. ஆறாவது பகுதி முடிவுரையாகும்.

*2. பணம் தொடர்பான கோட்பாடுகள்*

*1. பழம்பொருளியலாளர்களின் கோட்பாடு*

*1936க்கு முன்னர் பழம்பொருளியலாளர்கள்* பொருளாதாரத்தில் பணம் பொருளாதார நடவடிக்கைகளைஇலகுபடுத்தும்ஒருகருவியே அன்றி மாறாக நாட்டின் வேலைவாய்ப்பு மற்றும் மெய் வருமானத்தை அதிகரிக்காது என்று குறிப்பிட்டுள்ளனர். கேம்பிரிஜ்ஜின் பணக்கணியக் கோட்பாடானது இவர்களின் கருத்துக்கு அத்திவாரமாக அமைந்தது.

பணநிரம்பல்களில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது விலை மட்டத்தையும் பணத்தேசிய வருமானத்தையும் அதிகரிக்குமே அன்றி மெய்த்தேசிய வருமானத்தை அதிகரிக்காது. பணமானது பண்டமாற்று ஊடகம், பெறுமானத்திரட்டு, கணக்கீட்டு அலகு, பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம் என்ற பொருளாதாரத்தில் இலகுபடுத்தல் செயற்பாடுகளை ஆற்றுகின்றது. பணம் ஓர் கிறீஸ் போன்று (Money is grease) தொழிற்படுகின்றது. இயந்திரம் ஒன்றின் சுமூகமான நீடித்த பயன்பாட்டிற்கு கிறீஸ் பயன்படுவது போன்று பொருளாதாரம் ஒன்றின் இலகுபடுத்தல் நடவடிக்கைக்கு பணம் பயன்படுத்தப்படுகின்றது என்பது இவர்களது வாதமாகும். பொருளாதாரத்தின் இலகுபடுத்தல் தொழிற்பாட்டுக்கு (நிலையியல் தொழிற்பாடு) பணம் பயன்படுத்தப்படுகின்றதே அன்றி பொருளாதாரத்தின் இயங்கியல் செயற்பாட்டுக்கு பணம் பயன்படுவதில்லை. நாட்டின் பண வெளியீடானது பெறுமதிமிக்க உலோகங்களான தங்கம், வெள்ளி போன்றவற்றுடன் இணைக்கப்பட்டிருந்தது.

**2. கெயின்ஸின் கோட்பாடு**

பணம் தொடர்பான கோட்பாடுகளில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்திய கோட்பாடுகளில் கெயின்சின் கோட்பாடு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இவரின் கருத்தானது பழம் பொருளியலாளர்களின் பணம் ஓர் விடயமல்ல (Money does not matter) என்பதற்கு மாறாக பணம் ஒரு விடயம் என கூறுகின்றது(Money does matter). அதாவது பழம் பொருளியலாளர்கள் குறிப்பிட்ட பணத்தின்இலகு தொழிற்பாடுகளுக்கு மேலாக பணமானது நாட்டின் வேலைவாய்ப்பு மற்றும் வெளியீடு (உண்மை வெளியீடு) போன்றவற்றை

அதிகரிக்க பயன்படுத்தலாம் என்பது இவருடைய வாதம் ஆகும். பணம் ஓர் கிறீஸ் மட்டுமல்ல. பணம் ஓர் எரிபொருள் போன்றது என்கின்றார். பொருளாதாரத்தின் நிலையியல் தொழிற்பாட்டுக்கு மேலாக பொருளாதாரத்தின் இயங்கியல் தொழிற்பாடுகளுக்கும் பணம் பயன்படுத்தப்படுகிறது என்பது இவரது வாதமாக இருக்கின்றது.

### 3. பணவியலாளர்கள்

முன்னைய இரு பிரிவினரான பழம் பொருளியலாளர் மற்றும் கெயின்ஸ் இங்கிலாந்தை குறிப்பாக கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தை தளமாகக் கொண்டிருந்தனர். ஆனால் பணவியலாளர்கள் அமெரிக்காவில் சிக்காகோ பல்கலைக் கழகத்தை தளமாகக் கொண்டு பணம் பொருளாதாரத்தின் அதி உன்னதமான ஓர் கருவி என வாதிட்டனர். பண நிரம்பலில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பொருளாதாரத்தை நுண்சீராக்கி உறுதிப்படுத்துகின்றது என்கின்றனர். இவர்கள் பணத்தை ஒரு கம்பிச்சுருளுக்கு (Spring) ஒப்பிடுகின்றனர். அதாவது இயந்திரம் மற்றும் பொறிகளில் இணைக்கப்படுகின்ற கம்பிச்சுருளானது தனது பிரமாணத்தை விட நீண்டு இருந்தால் அல்லது ஒடுங்கி குறுகி சிறியதாகிவிட்டால் அது அதன் தொழிற்பாட்டை இழக்கின்றது. இதேபோன்றுதான் பணமானது நாட்டின் மொத்த வெளியீட்டுடன் இணைந்த வகையில் இதன் பிரமாணத்துக்கு ஒத்திசைவாக இருக்கின்றபோது நாட்டின் வெளியீடு, வேலைவாய்ப்பு தூண்டப்படுகின்றது. மாறாக பணத்தின் வெளியீடானது அது பொருளாதாரத்துக்கு தேவைப்படும் பிரமாணத்தைவிட குறைகின்றபோது அல்லது அதிகரிக்கின்றபோது நாட்டின் உற்பத்தி, வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டு பணவீக்கம் ஏற்படுகின்றதுஎன்பது இவர்களது வாதம் ஆகும். பணத்தை மிகச் சாதுரியமாக பயன்படுத்தி உற்பத்தி மட்டத்துடன் இணைக்கின்றபோது நாட்டின் உண்மை வெளியீட்டை குறுங்காலத்தில் அதிகரிக்க முடியும் என்பது இவர்களது வாதமாகும்.

கடதாசியில் அச்சிடப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி உண்மை வெளியீட்டை குறுங்காலத்தில் அதிகரிக்க முடியுமாயின் உலகிலே எல்லாப் பொருளாதாரங்களும் அவைகளுடைய பேரினப் பொருளாதார இலக்கான வெளியீடு, வேலைமட்ட அதிகரிப்பை இந்த நாணய வெளியீடு மூலம் அதிகரிப்பது இலகுவானது என்பது இதன் கருத்து அல்ல. பிரச்சினை என்னவென்றால் பண வெளியீடானது பொருளாதாரத்தின் வேலைவாய்ப்பு மற்றும் வெளியீட்டு பரிமாணத்துடன் இசைவானதாக அதிகரிக்கப்படுமாயின் பொருளாதாரம் நுண்சீராக்கப்படும் என்கின்றார். தேவையின் பிரமாணத்தைவிட அதிகரித்தாலும்சரி அல்லது குறைந்தாலும்சரி பொருளாதாரத்துக்கு பாதகம் என்பது வலியுறுத்தப்படுகின்றது. *1929-1933* காலப்பகுதியில் உலகப் பொருளாதார மந்தமானது பொருளாதாரங்களில் பணமானது வெளியீட்டுடன் ஒத்திசையாமல் இருந்த காரணத்தால் தோன்றியது. குறிப்பாக இக்காலப் பகுதியில் அமெரிக்காவின் பண நிரம்பலானது *38* சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே மனிதனின் சாதாரண வாழ்க்கையில் பணம் தேவைக்கு போதாது இருந்தாலும், பணம் தேவையை விட அதிகமாக இருந்தாலும் அவனுக்கு வாழ்க்கையில் பிரச்சினை உருவாக்குவது போன்று பொருளாதாரத்திலும் பணம் அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும் பிரச்சினை உருவாகின்றது.

கறுப்புப்பணம் தொடர்பான இந்தக் கட்டுரையில் இங்கு கோடிட்டில் நாம் அவதானிக்கப்பட வேண்டிய முக்கியமான ஓர் விடயம் என்னவெனில் நாட்டின் வெளியீட்டு மட்டத்துடன் இசைந்ததான பணத்தேவையின்

பிரமாணத்துக்கு இசைவாக பண நிரம்பல் நடைபெறுமாக இருந்தால் அப்பணம் முழுவதும் பதுக்கப்படாமல் சுற்றோட்டத்தில் இருக்கும்போதுதான் நாம் கோட்பாட்டு ரீதியாகப் பார்த்த பணம் தொடர்பான பொருளாதாரத்தின் நுண்சீராக்கல் நடைபெறும். மாறாக வெளியிடுகின்ற பணத்தின் குறிப்பிட்ட அளவு சுற்றோட்டத்தில் இல்லாமல் பாதுகாக்கப்படுமாக இருந்தால் பணக்கோட்பாடுகளில் கூறப்பட்ட நன்மைகளை ஓர் நாடு அனுபவிக்க மாட்டாது. வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும் கறுப்புப்பணமும் அமைக்கப்படாத அல்லது முறைசாராத பொருளாதார நடவடிக்கைகளுக்கு காரணமாக வெளியிடப்படுகின்ற பணத்தின் அளவுக்கு சமமாக இன்னொரு கறுப்புப்பணச் சந்தை ஒன்று இயங்குகிறது. இதன் காரணமாக பொருளாதார அபிவிருத்தி தடைப்படுகின்றது. நாட்டின் வேலைவாய்ப்பு, வெளிவீடுஅதிகரிப்பானது பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை விடயமாகும். அந்த வெளிவீட்டு அதிக ரிப்புக்கு தேவையான முதலீடானது சேமிக்கப்படும் சேமிப்பு மூலங்கள் மூலம் முறைசார் நிறுவனங்கள் ஊடாக வருவதை கறுப்புப்பணம் தடை செய்கின்றது. அதனால் முதலீடு குறைந்து வேலைவாய்ப்பு வருமானம் தடைப் படுகின்றது. அல்லது இந்த கறுப்புப்பண சேமிப்பானது முறைசாராத்துறைகளில் முதலிடப்படுவதனால் உண்மையான நாட்டின் தேசிய வருமானகணிப்பீட்டுக்குள் சேர்க்கப்படாமல் விடப்படுகின்றது. தேசிய வருமானக்கணிப்பீட்டுக்குள் சேர்த்தாலும் சேர்க்கப்படா விட்டாலும் நாட்டில் எங்கேயோ முறையற்ற முறையில் முதலிடப்பட்டு வேலைவாய்ப்பு, வருமானம் அதிகரிக்கப்படுகின்றதல்லவா? என்ற வாதமும் இருக்கின்றது. ஆனால் முறையற்ற அமைப்பில் முதலிடப்படுவதனால் அரசாங்கத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள் பாதிப்படைந்து பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைகின்றது. கணக்குக்கு வரும்போது தான் திட்டமிடலை சரியாகச் செய்ய முடியும். அதை விட ஏனைய சில தீமைகளும் இந்த முறைசாரா முதலீடுகள் மூலம் ஏற்படுகின்றன.

**3. கறுப்பு பண உருவாக்கத்தின் மூலங்கள்**

கறுப்புப் பணம் ஒன்று உருவாகுவதற்கான காரணங்களை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பின்வரும் கறுப்புப் பண உருவாகின்ற மூலங்கள் இனம் காணப்படுகின்றன. Ministry of finance (2012) அறிக்கையில் கறுப்புப் பண உருவாக்கத்தின் பல மூலங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இலஞ்சமாக பெறும் பணம், சட்டத்துக்கு புறம்பான பொருளாதார நடவடிக்கைகள், மதுபான விற்பனை நிலையங்கள், சூதாட்ட நிறுவனங்கள் மற்றும் சூதாட்டக்காரர்கள், அரசியல்வாதிகளின் அரசியல் செல்வாக்கு நடவடிக்கைகள், வரி ஏய்ப்பு செய்யும் நடவடிக்கைகள், கட்டுப்பாடுகளும் அனுமதி பத்திர முறைகளும் (மணல், சுரங்கம் கல் அகல்வு, மதுபானம்), உயர்வரி வருமான விதிப்புக்களும் கள்ளப்பணத்தை உருவாக்குகின்றது, சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் வினைத்திறன் அற்ற அமுலாக்கங்கள், அரசியல் கட்சிகளுக்கு நிதி வசதி வழங்கும் செயல்பாடுகள் (அன்பளிப்புக்கள், நிதியீட்டங்கள்), யுத்தம், மற்றும் ஆபத்து நிச்சயமற்ற தன்மையை பயன் படுத்தி அதிக இலாபம் சம்பாதித்தல், பணவீக்கம் கறுப்புப் பணத்தை உருவாக்குகின்றது. விலை அதிகரிப்பு காலத்தில் அதிக இலாபம் சம்பாதிக்க முடிகிறது. இது கறுப்பு பணத்தை உருவாக்குகின்றது, அமைக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகள் வியாபாரம் மற்றும் கிராமிய நடவடிக்கைகள் கறுப்புப் பணத்தை உருவாக்குகின்றன, தனியார் மயப்படுத்தல்கள் மற்றும் நகர வீடுகள், காணிகள், தொடர் குடியிருப்பு மனைகளின்

கைமாறுதல்கள் போன்ற நடவடிக்கைகள் கறுப்புப் பணத்தை உருவாக்குகின்றன.

மேற்குறிப்பிட்ட பல மூலங்களில் இருந்து கறுப்புப் பணம் உருவாகின்றது. பொருளாதா ரத்தில் கறுப்புப் பணம் உருவாக்கத்துக்கு காரணமாக இருப்பவர்களாக அரசியல்வாதிகள், விபச்சாரிகள், கள்ளக்கடத்தல்கள் செய்வோர், ஆள்கடத்தல்காரர்கள், கள்ளச் சாராயம் செய்வோர், விபச்சார விடுதி நடத்துவோர்கள், வரி ஏய்ப்பு செய்பவர்கள், இலஞ்சம் பெறு வர்கள், உயர் அதிகாரிகள், தொழில் அதிபர்கள், முதலமைச்சர்கள், ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்வோர், நடிகர்கள், சினிமா தொழிலில் இருப்பவர்கள், சிறிய பெரிய கடை முதலாளிகள், பங்கு சந்தையில் உள்ளக வர்த்தகம் செய்பவர்கள், பங்கு சந்தையில் போலியாக விலை உயர்வை செய்பவர்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் மருத்துவ மனைகள், மேற்குறிப்பிட்ட தொழில்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரசியல் வாதிகளின் ஊதுகுழல்களாக தொழிற்படும் பேராசிரியர்கள் போன்றவர்கள் சமூகத்தில் கறுப்புப் பணத்தை உருவாக்குகின்றனர்.

உலகத்தில் கறுப்புப் பணத்தின் அளவினை நோக்கும்போது சுவிஸ்சலாந்தின் தேசிய வங்கியின் அறிக்கைப்படி 2006 இல் சுவிஸ் வங்கியில் வைப்பு செய்த நாடுகள் அவைகளின் நிலையில் வருமாறு.

| நாடுகள் | வைப்பு செய்யப்பட்ட பணம் Billion |
|---|---|
| இந்தியா | $ 1456 |
| ருசியா | $ 470 |
| UK | $ 390 |
| உக்ரைன் | $ 100 |
| சீனா | $ 96 |

மூலம்:Swiss Banking Association report, 2006[4]

மேற்குறிப்பிட்ட தரவின்படி இந்தியா உலகத்தில் முதல் இடத்தில் நிற்பது மட்டும் அல்ல அளவில் ஏனைய நாடுகளை விட பல மடங்கில் அதிகமாக இருக்கின்றது.

உலகிலே கறுப்புப் பண நடவடிக்கை அமைக்கப்பட்ட ஓர் பொருளாதாரத்துக்கு சமாந்தரமாக இன்னொரு கணக்கிடப்படாத ஒரு பொருளாதாரமாக வளர்ந்து செல்வதை அவதானிக்கலாம்.

Sukanta Sarkar (2010) ஆய்வில் உலகத்தில் வளர்ந்த நாடுகளிலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் அமைக்கப்படாத பொருளாதா ரத்தைGDP இன் வீதமாக குறிப்பிடுகின்றார்.

அட்டவணை 1 : உலக நாடுகளில் கறுப்பு பொருளாதாரம்

| நாடுகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அமைக்கப்படாத பொருளாதார நடவடிக்கையின் சதவீதம் (AS % GDP) |
|---|---|
| கிரேக்கம், இத்தாலி, ஸ்பெயின்,போத்துக்கல், பெல்ஜியம் | 24 – 30 % |
| சுவீடன், நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து பிரான்ஸ், நெதர்லாந்து ஜேர்மனி, பெரிய பிரித்தானியா | 12 – 23 |
| ஜப்பான்,USA, ஆஸ்ரியா, சுவிஸ்லாந்து | 8 – 10% |
| நையீரியா, எகிப்து (1990 – 93) | 68 – 76 |
| துனிசியா, மொறாக்கோ | 39 – 49% |
| கௌதமாலா மெக்சிக்வோ, பீரு மற்றும் பனாமா | 40 – 60% |
| கொஸ்ராறிக்கோ வெறுசுவெலா பிரேசில், பிரடுவோ கொலம் பியா | 25 – 35% |
| தாய்லாந்து | 70% |
| பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா, தென்கொரியா | 38 – 50% |
| கொங்ஹொங் சிங்கப்பூர் | 13% |

மூலம்: Sukanta Sarkar (2010) originated from
https://www.crisil.com/youngthoughtleader/winners/topic4_Jyoti_Agarwal_Iim_CAL.PDF

**4. கறுப்புப்பணத்தின் பொருளாதார தீமைகள்**

கறுப்புப் பணமானது பொருளாதாரத்தில் பல பாதகமான தாக்கங்களை உருவாக்குகின்றது. கறுப்புப் பணத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் இழப்பும் மறுபுறத்தில் அதை உருவாக்குபவர்களுக்கு பெறப்படும் நயமும் முக்கியமானதாகும். அரசின் திட்டமிடலுக்கு அப்பால் பொருளாதாரத்தின் நுகர்வு திசைமாறிச் செல்லுகின்றது. இதன் காரணமாக நாட்டின் சேமிப்பு குறைந்து முதலீடு குறைகின்றது. முதலீட்டு இழப்பு ஏற்படுகின்றது. நுகர்வு திட்டமிடாத காரணத்தால் விலைகளின் பகட்டான அதிகரிப்பு ஏற்படுகின்றது. பொருளாதாரத்தில் ஒரு பகுதியினர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணத்தை சம்பாதிக்க மறுபிரிவினர் சட்டவரையறைகளுக்கு அப்பால் பணம் சம்பாதிப்பதால் நியாயமற்ற போட்டி உருவாகின்றது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் ஏற்படும் மாற்றங்கள் கறுப்பு பணத்தால் உருவாகின்றது. கறுப்புப் பணம் பொருளாதார வளர்ச்சியில் எதிரான தாக்கத்தை உருவாக்குகின்றது. இதன்காரணமாக வெளியீடு, வேலைவாய்ப்பு, வருமானத்தில் ஏற்படும் தாக்கங்கள் ஏற்படுகின்றன. பொதுத்துறைக்கு குறைந்த வருவாய் கிடைக்கின்றது. கறுப்புப் பணம் காரணமாக தனியார்மயமாக்கல் விரைவுபடுத்தப்படுகின்றது. அரச தொழில் முயற்சிகள் தனியார் துறைக்கு மாற்றப்படுகின்றன.

கறுப்புப் பண உருவாக்கம் காரணமாக பணத்துக்கான கேள்வி, வெளிநாட்டு நாண யத்துக்கான கேள்வி, மற்றும் வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஏற்ப்படுகின்றன. பொதுவாக கறுப்புப் பணம் காரணமாக வட்டி வீத மற்றும் நாணயமாற்று வீத அதிகரிப்பு ஏற்படுகின்றது. கறுப்புப் பணம் காரணமாக கடன்களின் உயர்ந்த கிடைப்பனவுத்தன்மை, உயர்வான மூலதன உட்பாய்ச்சல்கள் இடம்பெறலாம். FDI இல் ஏற்படும் மாற்றங்கள் ஏற்படலாம். கறுப்புப் பண உருவாக்கம் நிதித்துறைக்கான ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மையினை அதிகரிக்கின்றது. இது நிதித்துறைக்கான இலாபத்தைக குறைக்கின்றது. இவைகள் நிதித் துறையின் நன்மதிப்பை குறைக்கின்றது. கறுப்புப் பணத்தினால் சட்டரீதியற்ற வர்த்தகம் அதிகரிப்பது மட்டும் அல்ல பொருளாதார புள்ளிவிபரங்களில்தவறுகள் இடம் பெறுகின்றன.

கறுப்புப் பண அதிகரிப்பு இலஞ்சம் மோசடிகள் அதிகரிப்பு மற்றும் குற்றங்களின் அதிகரிப்பு ஏற்பட வழிவகுக்கின்றது. இதுநேர்மையானஅரசியல் நிறுவனங்களை தொழிற்பட தடுக்கின்றது.கறுப்புப் பணமா னது வெளிநாட்டுக் கொள்கைகளின் நோக் கங்களை தடுக்கின்றது. கறுப்புப் பணம் கார ணமாக பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிக் கின்றன. கறுப்பு பணம் காரணமாக வருமான சமமின்மை அதிகரித்து வறுமை தொடர்ந்து இருக்க காரணமாகின்றது. கறுப்புப் பணம் காரணமாக தொழில்நுட்ப பற்றாக்குறை மற்றும் உள்நாட்டு நாணயங்களின் வெளிநாடு நோக்கிய பண அசைவுகள் ஏற்படுகின்றன.

#### 4. கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றுதல்.

பொருளாதாரம் ஒன்றில் சட்டத்துக்கு புறம்பாக சம்பாதிக்கப்படும் வருமானம் கறுப்புப் பணமாக இருந்து வருகின்றது. கறுப்புப் பணத்தை சட்டரீதியான பணமாக மாற்றுவதற்கு இந்நாடுகளில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது பணச் சலவை நடவடிக்கைகள் என அழைக்கப்படுகின்றது.

1. உள்நாடுகளில் உள்ள உறவினர்கள் அல்லது நம்பிக்கைக்கு உரியவர்களின் பெயர்களில் மெய்சொத்துக்களில் முதலீடு செய்தல்.
2. வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் அல்லது நம்பிக்கைக்கு உரியவர்களின் பெயர்களில் மெய்சொத்துக்களில் முதலீடு செய்தல்.
3. கறுப்புப் பணத்தை தேர்தல் வெற்றிக்காக செலவீடு செய்து அதிகாரத்தை கைப்பற்றி மீண்டும் முதலிடப்பட்ட கறுப்பு பணத்தையும் மேலதிக பணத்தையும் சம்பாதித்தல்.
4. ஆடம்பரமான விமானப்பயணங்களில் ஈடுபடுதல்.
5. தங்க நகைகளை வாங்கிக் குவித்தல்.
6. றியல் எஸ்டேட்டுக்களில் முதலீடு செய்தல்.
7. உள்நாட்டில் பிறரின் பெயர்களில் (பினாமிகள்) சொத்துக்களை வாங்குதல்.

#### 5. இந்தியாவில் கறுப்புப் பணம்

#### இந்தியாவின் கறுப்பு பண கணக்கீடுகள்

இந்தியாவில் கறுப்பு பொருளாதாரத்தை ஆராய்வதற்கு பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. அவைகள் இந்தியாவின் கறுப்புப் பண உருவாக்கத்தின் மூலங்கள் மற்றும் அளவுகளை எடுத்து இயம்புகின்றன. Sukanta Sarkar (2010)இன் கணிப்பீட்டின்படி 1961 – 62 இலாபம் ரூ 700 கோடி ஆகும். இது 1965 – 66 க்கும் இடையில் ரூ 1000 கோடியாக அதிகரித்துள்ளது. இது பின்வரும் மூன்று விடயங்களை உள்ளடக்கி இருந்தது. இது 1968 – 69 ரூ 1800 கோடி ஆகும்.

1. கூலியும்சம்பளமும் (பதியப்படாதவை)
2. சுயதொழில் வருமானங்கள் (பதியப்படாதவை)
3. இலாபம், வட்டி, மற்றும் வாடகை

Wanchoo.K.N.S இன் கணிப்பீட்டின்படி 1961 – 62 இடையில் ரூபா 2685 கோடி கறுப்பு பணம் காணப்பட்டது. இது மொத்ததேசிய உற்பத்தியில் 44 வீதம் ஆகும். D.K.Rangnakar இன் கணிப்பீட்டின்படி 1968 – 69 இல் 2833 கோடியையும் 1969 – 1970 இல் இது 3080 கோடியாகவும் காணப்பட்டது. இது மொத்த சார்க்நாட்டு உற்பத்தியில் 5.2 வீதம் ஆகும். Chopra இன் கணிப்பீட்டின்படி 1961 – 62 ரூபா 916 கோடி (61. of GDP) இது 1976 – 77 இல் 10.5 வீதமாக ரூபா 8098 கோடியாக உயர்ந்தது. Gupta இன் கணிப்பீட்டின்படி 1967 – 68 இல் ரூ 3034 கோடியில் இருந்து 1978 – 79 இல் ரூ 46867 கோடியாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு பல ஆய்வுகள் பல முறைகளை பயன்படுத்தி இந்தியாவின் கறுப்பு பணத்தை மதிப்பீடு செய்தன. ஆய்வுகளுக்கு இடையில் அளவில் வேறுபாடு இருந்தபோதும் இந்த கறுப்பு பண அளவு அதிகமாக இருந்து அதிகரித்து செல்கின்ற போக்கு காணப்படுகின்றது.

இந்தியாவின் இந்து நாளிதழ் அலுவலகமற்ற ஓர் மதிப்பீடாக இந்தியாவின் கறுப்புப் பணமானது 2010 இல் $1456 பில்லியன் சுவிஸ் வங்கியில் இருப்பதாக குறிப்பிட்டது.

Schneider இன் கணிப்பீட்டின்படி இந்தியாவின் கறுப்புப் பணமானது GDP இன் வீதமாக 23 – 26 வீதத்துக்கும் இடையில் இருப்பதாக குறிப்பிடுகிறார்.

| காலம் | கறுப்பு பணம் | GDP இன்வீதம் |
|---|---|---|
| 1975 – 76 | 9958 – 11870 | 15 – 18 |
| 1980 – 81 | 20362 – 23678 | 18 – 21 |
| 1983 – 84 | 31584 – 36784 | 19 - 21 |

மூலம்:- நிதி அமைச்சு, இந்தியா, 2012 (White Paper)

இந்தியாவின் பொது நிதிமற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனமானது இந்தியாவின் கறுப்பு பணமானது ஒரு லட்சம் கோடி இந்தியன் ரூபா என மதிப்பிட்டுள்ளது. எனவே பொதுவாக இன்று (2016) இந்தியாவின் கறுப்பு பணமாவது US$ 2000 பில்லியன்களுக்கு அதிகமாக உள்ளது என்பது வெளிப்படையாகின்றது. இந்தியாவின் சர்வதேச ஒதுக்கம் 2016 நவம்பரில் US$ 0.365 பில்லியன்கள் ஆகும். உலகத்தில் ஆறாவது நிலையில் இருக்கும் இந்தியாவின் GDP 2016 இல் US$ 2300 பில்லியன் ஆகும்.

நாங்கள் ஏற்கனவே நோக்கியவாறு உலகிலே அதிக அளவான கறுப்பு பணம் உள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தை வகிக்கின்றது. பொருளாதாரத்துக்கு அதிக தீமைகளை கொண்டிருக்கின்ற கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உலகிலே முதல் முதலில் ஜப்பான் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் அதிக பணவீக்கம் நிலவியபோது உயர் பெறுமதியான நாணயத் தாள்களை செல்லுபடியற்றதாக்கியது.

1978 இல் மொராஜி தேசாய் அரசும் சில தாள்களை தடை செய்தது. இவ்வாறு பல வகையான திட்டங்களைச் செய்தும் கறுப்புப் பணம் குறையவில்லை. மாறாக அதிகரித்துக் கொண்டே சென்றது. இந்தியாவில் மோடி அரசு

பதவிக்கு வந்த பின்னர் கூட கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு பல வரி மன்னிப்புச் சலுகைகளை வழங்கி வந்துள்ளது. வரி மன்னிப்புத் திட்டத்தினால் ஏறத்தாழ $10 பில்லியன் கறுப்புப் பணம் வெளியில் கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் இது கணக்கிடப்பட்ட கறுப்புப் பணம் $ 2000 பில்லியனின் ஒர் சிறிய தொகையே ஆகும்.

கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு ஒர் புதிய நடவடிக்கையாக மோடி அரசாங்கம் 500 மற்றும் 1000 தாள்களை செல்லுபடியற்றதாக அறிவித்துள்ளது. இதுவரை வங்கி வெளியிட்ட 500 மற்றும் 1000 தாள்கள் 8.4 இலட்சம் ஆகும். ஆனால் அரசின் கணிப்பீட்டின் படி பணப்புழக்கத்தில் சுழற்சியில் ஈடுபடும் தாள்கள் ஏறத்தாழ 4.4 லட்சம் ஆகும். மிகுதி 4 இலட்சம் தாள்கள் இவ் அறிவிப்பு ஊடாக வங்கிகளுக்கு வரும் என அரசு எதிர்பார்த்தது. 2016 டிசெம்பர் 30ம் திகதிவரை வங்கிகளில் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் வரை செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டது. இந்த அளவு பின்னர் 10 000 ஆக குறைக்கப்பட்டது. இவ்வாறு பழைய தாள்களை வைப்பு செய்யும் போது பல கேள்விகள் கேட்கப்பட்டன.

ஒருவர் ஒரு தடவைக்கு மேல் வங்கியில் பணம் வைப்பில் இடமுடியாது. அதுவும் வரையறுக்கப்பட்ட தொகையே ஆகும். புகையிரத நிலையங்கள், வைத்தியசாலைகளில் தங்கள் தேவைக்கு 2016 முடியும் வரை (டிசெம்பர் 2016) இதை மாற்ற முடியும். இவ் அறிவிப்பு காரணமாக சாதாரணமாக ரூ 2000 ஒரு நாளுக்கு பணம் மூலம் விற்பனை செய்யப்பட்ட புகையிரத பயணசீட்டுக்கள் 20000 ஆக அதிகரித்தது. இவ் அறிவிப்பு வந்து ஒர் சில மணித்தியாலங்களில் ரூ 750 மில்லியன் பெறுமதியான 250 கிலோ தங்கம் கைமாறப் பட்டுள்ளது. தங்கத்தின் விலை சடுதியாக அதிகரித்தது.

2016 இல் இந்தியாவில் அரசின் வரி வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.7வீதம் ஆகும். JUSA இல் 24.4 ஆகவும். ஜப்பானில் 30.3 வீதமானவும் உள்ளது. 2016 இல் இந்தியாவின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை $ 80 பில்லியன்கள் ஆகும். இவ் அறிவிப்பு மூலம் அரசின் வரவு செலவுதிட்ட பற்றாக்குறைக்கு U$ 30 பில்லியன்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**ரூ500, ரூ1000 தாள்களை செல்லுபடியற்றதாக் கியதால் ஏற்பட்ட அல்லது ஏற்படும் விளைவுகள்.**

இந்தியாவுக்கு கள்ளப்பணமானது பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்டு இந்தியாவில் விநியோகிக்கப்படுகின்றது. இந்த புதிய அறிவிப்பு காரணமாக வீதியில் கள்ளப்பணத்தாள்கள் கிடந்தன. போலியான தாள்கள் அழிக்கப்பட்டுள்ளது. அரசின் வரிவருமானம் அதிகரிக்கும். கறுப்பு பணமாக சேமிக்கப்பட்ட பணமானது பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையால் அவை முதலீட்டுக்கு உதவவில்லை. இவ் அறிவிப்பு இச் சேமிப்பை முதலீடாக மாற்றும். இந்தியாவில் மிகப்பிரமாண்டமாக விவசாயத்துறை இருந்து வந்ததுள்ளது. இவ் அறிவிப்பு காரணமாக இது அமைக்கப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட துறையாக படிப்படியாக மாறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. நிறுவனமயமாக்கல் பொருளாதாரத்துக்கு பல நன்மைகளை உருவாக்கும். தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அரசின் வரி வருமானம் அதிகரித்து வரவு செலவுத்திட்டபற்றாக்குறை குறைவடை வதனாலும். நாட்டின் பொது விலை மட்டம் குறைவடையக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. வீடுகள் மற்றும் தொடர்மாடி குடியிருப்பு மனைகளின் விலைகள் குறைவடையும். வீடுகளின் விலை குறைவடைவதால் வீட்டு வாடகை குறைவடையும். வங்கிகளின் வாடிக் கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால்

அவைகளின் இலாபம் அதிகரிக்கும். நிறுவன மயப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் அவற்றின் நன்மைகளும். பொருளாதாரத்தின் வள ஒதுக்கீடானது சரியாக வினைத்திறனான தேவையான துறைக்கு செல்லும். நாட்டின் தேசிய உற்பத்திக் கணிப்பீடு மற்றும் நாட்டின் திட்டமிடல் சிறப்பாக அமையும். நாணயக் கொள்கை வினைத் திறனாக தொழிற்படும். வருமான சமமின்மை மற்றும் வறுமை குறையும். சுருக்க மாகக் கூறினால், கறுப்புப் பணத்தால் உருவாகும் பாதகமான விளைவுகள் யாவும் நிவர்த்தி செய்யப்படும்.

**6. இந்தியாவில் கறுப்பு பணத்தை வெளிக் கொண்டு வருவதில் உள்ள சவால்கள்**

மேலே குறிப்பிட்ட பல நேர்கணிய விளைவுகளை ரூ 500, 1000 தாள்களை செல்லு படியற்ற தாக்கியதால் கிடைக்கும் என எதிர் பார்க்கப்பட்ட போதும் நடைமுறையில் இந்த நன்மைகளை பெறுவதில் இந்தியப் பொரு ளாதாரம் பல சவால்களைக் கொண்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு பிரச்சினை**

இந்தியாவின் சட்டம் ஒழுங்கில் பல ஓட்டைகள் காணப்படுகின்றன. இந்த அறிவிப்பு காரணமாக இந்த ஓட்டைகளைப் பயன்படுத்தி கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் அவற்றை வேறு வழிகளில் தொடர்ந்து வைத்தி ருக்க முயல்வார்கள். ஓர் நோயாளிக்கு பல நோய்கள் இருக்கும்போது ஓர் நோய்க்கு மட்டும் பரிகாரம் தேடுவதால் நோயாளி குணமடைந்து விடுவான் எனக் கூறமுடியாது. இதே போன்றுதான் கறுப்பு பணம் என்பது ஓர் பகுதியான பிரச்சினை மட்டும்தான். இது ஏனைய பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டு இருப்பதால் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும்.

**அரசியல் தலையீடுகள்**

மோடியின் அரசின் அறிவிப்புக்கு ஆளும் அரசாங்க அரசியல்வாதிகளே இதை எதிர்த்தார்கள். இந்த எதிர்ப்பு குறிப்பிடுவது யாதெனில் அரசியல்வாதிகளின் பூரணமான ஒத்துழைப்பு இன்றி இந்நடவடிக்கை அதிக நன்மைகளைக் கொண்டு வராது என்பதாகும்.

**கிராமியப் பொருளாதாரம்**

இந்தியாவின் கறுப்புப் பண உருவாக்கத்தில் கிராமியப் பொருளாதாரத்துக்கும் மிக பெரிய பங்கு உண்டு. நாணயத் தாள்கள் அற்ற சமூகத்தை உருவாக்குவது கடினமான முயற்சியாகும் .அமைக்கப்படாத துறையில் பலர் சட்டத்துக்கு புறம்பாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றனர். இந்தக் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக கட்டுப் படுத்த முடியாது. மாற்றத்துக்கு நீண்ட காலம் தேவைப்படுகின்றது.

**கறுப்புப் பணத்தின் வடிவம்**

இந்தியர்கள் கறுப்புப் பணத்தை ரூ 500, 1000 தாள்களில் வைத்திருப்பது சிறு தொகைதான் இந்த அறிவிப்பு சிறு தொகை பணத்தை மட்டும்தான் வெளியில் கொண்டுவர உதவும். ஏனைய வடிவங்களில் உள்ள கறுப்புப் பண நடவடிக்கைகள் தொடர்ந்து இருக்கும்.

**அரசியல் கட்சிகளின் வளர்ச்சி**

அரசின் இந்த அறிவிப்பானது பலரை அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதை ஊக்குவிக்கும். இது அரசியல் கட்சிகளை வலுப்படுத்தும்.

**நுகர்வு மாற்றம்**

அரசின் இந்த அறிவிப்பானது கறுப்புப் பணத்தை கொண்டிருக்கும் இந்தியர்களை அதிகமாக ஆடம்பர நுகர்வில் செலவிட தூ ண்டும் உதாரணமாக இந்த அறிவிப்பு வெளி வந்த பின்னர் இந்தியாவில் ஒரு அரசியல்வாதி ரூ 700 கோடி செலவில் தனது மகளுக்கு திருமணம் செய்துள்ளார். திருமணபட்டு புடவையின் பெறுமதி 130 கோடி ஆகும். எனவே பதுக்கப்பட்ட பணம் முதலீடாக

மாறும் என்பதற்குப் பதிலாக ஆடம்பரமான நுகர்வுக்குச் சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

#### நிதி வெளிப்பாய்ச்சல்

இந்தியாவில் கணிசமான ஊழியப்படை வெளிநாடுகளில் தொழில்புரிகிறார்கள் கறுப்புப் பணத்தை இந்த ஊழியப்படை அனுப்பும் பணத்தை உண்டியல் முறையைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களாக மாற்ற முடியும். எனவே இந்தியாவில் திரட்டப்பட்ட வருவாய் வெளிநாடுகளுக்கு செல்லும் நிலை உருவாகும். இதைத் தடுப்பதற்கு புதிய சட்டங்கள் தேவைப் படும். இருக்கின்ற சட்டம் ஒழுங்காக செயற் படாத போது புதிய சட்டம் உண்டியல் பரிவர்த்தனையை தடுக்குமா?என்பது கேள்விக்குறியே ஆகும். அதைவிட கறுப்பு பணம் அதிகமாக கொண்டிருப்போர் அரசியல்வாதிகளாக இருப்பதால் இவ்வாறு உண்டியல் பரிவர்த்தனையை தடுக்க புதிய சட்டங்களை கொண்டுவர தயங்குவார்கள். இதனால் நிலைமையில் மாற்றம் ஏற்படமாட் டாது எனக் கூறப்படுகின்றது.

#### தூய்மையற்ற பணிக்குழுக்கள்

உண்மையில் பிரதமர் மோடி ஒர் சிறந்த தூர நோக்குள்ள தலைமைப்பண்பில் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார். அவர் குடும்பம் இல்லாமல் தனிமனிதனாக இருப்பதால் மேன்மையான உயர் தலைமைப்பண்பை கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளார். ஆனால் இது நடைமுறையில் அவருடைய இலக்குக்கு வெற்றி பெற செய்வதற்கு அரசாங்க உறுப்பினர்கள், உயர் அதிகாரிகளின் பங்களிப்பு அவசியமானதாகும். அண்மையில் சென்னையில் ரூ 2000 பெறுமதியான புதிய தாள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது வங்கியில் இருந்து ரூபா 500, 1000 தாள்களைவங்கியின் உயர் அதிகாரி ஒத்துழைப்புடன் மாற்றிக் கொடுக் கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. எனவே இந்தியாவின் பணிக்குழுக்களும் ஊழல் நிறைந்ததாக இருப்பதால் இத்திட்டத்தின் வெற்றிக்கு தடையாக இருக்கிறது. கூட்டுறவு கிராமிய வங்கி அதிகாரிகளும் மோசடியாக மாற்றிக் கொடுத்துள்ளார்கள். அரச அதிகாரிகளின் ஆதரவு இல்லை.

#### உள்ளூர் கைமாற்றல்கள்.

உள்ளூரில் வர்த்தகங்களுக்கு நாளாந்தம் சிறிய தாள்கள் வந்து சேர்கின்றன. இவற்றை கறுப்புப் பணம் பதுக்கியவர்கள் கழிவுக்கு வாங்கிக்கொண்டு ரூ 500, 1000தாள்களை கொடுக்கிறார்கள். வர்த்தகர்கள் அதனை நாளாந்தம் வங்கியில் வைப்புச்செய்கிறார்கள். இந்த வகையில் மதுபானக் கடைகளில் பாரிய அளவில் கறுப்புப்பணம் வெள்ளைப்பணமாக மாற்றப்பட்டது. மதுபானச்சாலை உரிமை யாளர்கள் தினமும் சிறிய தாள்களுக்கு வியாபாரம் செய்து அவற்றை கழிவு வீதத்தில் கறுப்புப்பணம் பதுக்கியவர்களுக்கு கொடுத்து 500,1000 தாள்களை பெற்று வங்கியில் வைப்பு செய்தனர்.

#### ஊடகத்தின் பக்கச்சார்பு

பிரதமரின் இந்த அறிவிப்பு பொருளாதார ரீதியாக இந்தியப் பொருளாதாரத்தை வல்லமையாக்கும். ஆனால் இதன் நன்மைகளை பாமர மக்களுக்கு எடுத்துச் செல்ல தொடர்பு சாதனங்கள் பின்னடிக்கின்றன. தொடர்பு சாதனங்கள் 2016 இல் கொண்டுவந்த அறிவிப்பால் கிடைக்கும் நன்மைகளைக் காட்டிலும் தீமைகளையே அதிகம் பறைசாற் றகின்றன. திட்டத்தின் ஆரம்பத்தில் ஏற்படும் ஒருசில இடர்பாடுகளை பூதாகரமாக்கி அவற்றை மக்களுக்கு சேர்ப்பதில் ஊடகத்துறை சாதனங்கள் முண்டியடிக்கின்றன. இது ஏன் என ஆழமாக நோக்கும்போது இந்த ஊடகங்களின் உரிமையாளர்கள் அரசியல்வாதிகளாகவும் தொழிலதிபர்களாகவும் இருப்பதனால் இவர்கள்தான் கறுப்புப்பணம் அதிகமாக

கொண்டிருப்பதனால் அவ் அறிவிப்பின் அதிக நன்மைகளைவிட சிறிய தீமைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை திசைதிருப்ப முயல்கின்றனர். ஆனால் சர்வதேச ஊடகங்கள் இந்த தீர்மானத்தை பாராட்டின.

## 7. முடிவுரை

உலகிலே கறுப்புப் பணத்தை கொண்ட நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருக்கின்றது. கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்கு பதவியில் இருந்த அரசுகள் பல நடவடிக்கைகள் மேற்கொண்டன. இந்த வரிசையில் பிரதமர் மோடியின் 2016 இல் 500 மற்றும் 1000 நாணயதாள்களின் செல்லுபடியற்ற அறிவிப்பு மூலம் இந்தியப்பொருளாதாரம் நன்மையடைய வேண்டுமானால் மேற்குறிப்பிட்ட இடர்கள் இல்லது சவால்கள் நீக்கப்பட வேண்டும். இந்தியாவை பணமற்ற சமூகமாக மாற்றுவதென்பது குஜராத்தில் மாதிரி திட்டத்தில் வெற்றியாக இருந்தாலும் நடைமுறையில் பல சவால்கள் உள்ளன. கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக குறைந்த வருமானம் உள்ள மக்களை வங்கிகளுடன் இணைக்கும் போது வங்கிகள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கு இது வழிவகுக்கும். இந்தியாவில் ஒட்டுமொத்தமாக பல சீர்திருத்தங்கள் மூலமே இவ் அறிவிப்பின் நன்மைகளை அனுபவிக்க முடியும். பொருளாதாரத்தில் கோட்பாடுகள் எடுத்துக் காட்டுகின்ற பணத்தின் நன்மைகளை இந்தியா அனுபவிக்க வேண்டுமாக இருந்தால் கறுப்பு பணம் ஒழிக்கப்பட வேண்டும். இதை அடைவதற்கு நாட்டின் அனைத்து மட்டங்களில் இருந்தும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. Arunkumar(2017) - Black Money in India-JNU New Delhi
2. Devendra vishwakarma (2016)Effects of black money on Indian Economy, International Journal of Research in Finance and Marketing , Volume 6 , Issue 2 (February, 2016)
3. Dinesh Unnikrishnan (2017) Demonetisation: How Narendra Modi changed narrative from black money to cashless economy
4. Gupta, S.B. (1982), Monetary Economics-Institutions, Theory & Policy, S.Chand and Company, New Delhi. Ahuja, R. (2007). "Social Problems in India" (2nd Ed). Jaipur: Rawat Publications
5. Ministry of finance (2012) Black money in India, White paper, ministry of finance department of revenue central board of direct taxes new delhi
6. Mohan Agarwal(2012), edit."White Paper On Black Money", Journal of Securities Academy & faculty for e-education, vol.72. businesstoday.intoday.in/story/white_p aper_on black money features/1/185177.html 24jan_2012.
7. Nafees.A.Khan, P.T.Chaudhary (2003) "Black Money: Its Impact on the Indian Economy," Tax Reforms in India (Ed.), Srinawas Publications, Jaipur,pp. 150- 155,2003.
8. Nation News(2016) PM Modi's war on black money: Here's how world media responded to Indian currency's overhaul,n15/11/2016

9. Rajni arora ( 2012 ) black money in india: present status and future challenges, international journal of science, engineering and technology research (ijsetr) volume 1, issue 5, november 2012
10. Shankaracharya(1983)The uncounted economy in india: a critical survey of some recent estimates.
11. Sharma B.P.(2014) SIT on Black Money: Historic Decision of the Modi Government, Pacific Business Review International Volume 6, Issue 12, June 2014
12. Sukanta Sarkar (2010). "The parallel economy in India: Causes, impacts & government initiatives". Economic Journal of Development Issues, Volume 11-12 no.(1-2) p.124-134.
13. Sukanta Sarkar (2010) The parallel economy in India: causes, impacts and government initiatives, Economic Journal of Development Issues Vol. 11 & 12 No. 1-2 (2010) Combined Issue
14. Thomas M. Humphrey (1991 )Nonneutrality of Money in Classical Monetary Thought,Economic review, march/april 1991
15. Vijay Kumar Singh, (January 2009) "Controlling money laundering in India – problems & perspectives" To be presented at the 11th Annual Conference on Money and Finance in the Indian Economy- At the Indira Gandhi Institute of Development Research CA Lalit
16. Wanchoo Committee (1972) Wanchoo Committee report on black money by H. P. Ranina